**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் :206/மா/2023**
**நாள் : 12/09/2023**

திரு. ரா.அய்யாத்துரை,
திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
சிவகாசி மாநகராட்சி,
சிவகாசி. – எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், திருத்தங்கல், S.N.புரம் ரோடு, சண்முகவேல் தேவர் சந்து, எண்.3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.ரா.அய்யாத்துரை என்பவரின் 19.07.2023 நாளிட்ட மனு 21.07.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 206/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

விருதுநகர் மாவட்டம், திருத்தங்கல், S.N.புரம் ரோடு, சண்முகவேல் தேவர் சந்து, எண்.3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.ரா.அய்யாத்துரை என்பவர் தனது 19.07.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

" விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், திருத்தங்கல், சண்முகவேல் தேவர் சந்து, சர்வே எண்.1456 உட்பிரிவு 10ல் உள்ள பொதுப்பாதையை வெ.பாலகிருஷ்ணன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கும்படி சிவகாசி வட்டாட்சியர் 24.04.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக ஆணையாளர், சிவகாசி மாநகராட்சி அவர்களுக்கு கிராம கணக்கு நகல்களுடன் இணைத்து அனுப்பியுள்ளார்.

இந்த ஆணை கிடைக்கப்பெற்று 70 நாட்களை கடந்து விட்டது. சிவகாசி மாநகராட்சியிலிருந்து காலம் தாழ்த்தி 22.05.2023 அன்று திரு.கார்த்திகேயன் அவர்கள் நேரில் வந்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தை பார்வையிட்ட பின்பு இந்த ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடம் மாநகராட்சிக்கு உரிய இடமாக இருந்தால் மட்டுமே ஆக்கிரமிப்பை அகற்ற முடியும் என்றும் எனது பத்திரங்களை எடுத்து வந்து காண்பிக்க வேண்டும் எனவும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடமானது மாநகராட்சிக்கு உரிய இடம் இல்லை எனவே தாங்கள் நீதிமன்றத்திற்கு செல்லுமாறும் கூறிவிட்டார்.

வெ.பாலகிருஷ்ணன் பொதுப்பாதையை 15 அடி உயர பில்லர் எழுப்பி இரும்பு கேட் வைத்து அடைத்துக்கொண்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் எனது வீட்டிற்கு பாதை தடைபட்டுள்ளது. ஆகையால் கடந்த 3 வருடங்களாக எனது குடும்பம் வசிக்க இடமில்லாமல் சொந்த வீட்டை விட்டு நாங்கள் அனைவரும் வாடகை வீட்டில் வசித்து வருகிறோம். இதனால் எனது குடும்பத்தினர் அனைவரும் மிகவும் சிரமப்பட்டு மன உளைச்சலால் நிம்மதி இல்லாமல் இருக்கின்றோம்.

அரசாணை 540 தமிழ்நாட்டில் உள்ள புறம்போக்கு நிலங்கள், நீர்நிலைகளில் எத்தகைய ஆக்கிரமிப்புகளாக இருந்தாலும் அகற்ற வேண்டும் என வலியுறுத்துகிறது. தற்போது திரு.கார்த்திகேயன் அவர்கள் மாநகராட்சிக்கு உரிய இடம் இல்லை என கூறியிருப்பது முரணாக உள்ளது. வட்டாட்சியர் அவர்கள் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்க ஆணையிட்டதை செயல்படுத்த மறுக்கிறார். இது தொடர்பாக 25.05.2023 அன்று மாநகராட்சி அலுவலகத்தில் திரு.கார்த்திகேயன் அவர்களை நேரில் சென்று கேட்டபோது வெ.பாலகிருஷ்ணன் அவர்கள் மேல்முறையீடு செய்துள்ளதாகவும், அதனால் வட்டாட்சியரிடம் அறிக்கை கேட்டிருப்பதாகவும் கூறினார். இது தொடர்பாக வட்டாட்சியர் தனது 08.06.2023 நாளிட்ட அறிக்கையில் ஆக்கிரமிப்பை உறுதி செய்து அகற்றும்படி கூறியுள்ளார். ஆனால் திரு.கார்த்திகேயன் அவர்கள் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்.

24.04.2023 அன்று வட்டாட்சியர் அவர்களின் ஆணையை செயல்படுத்துவதற்கு பதிலாக 08.05.2023 அன்று மாநகராட்சிக்கு வெ.பாலகிருஷ்ணன் அவர்கள் அனுப்பிய நகலினை வைத்து அறிக்கை கேட்டு தற்போது வட்டாட்சியர் அவர்கள் அறிக்கையினை அளித்த பின்பும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது வெ.பாலகிருஷ்ணன் அவர்களிடம் திரு.கார்த்திகேயன் அவர்கள் இலஞ்சம் பெற்றுக்கொண்டு செயல்படுகிறாரா என சந்தேகம் எழுகிறது.

கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து இதுநாள்வரை எவ்வித தடை உத்தரவும் வரவில்லை. ஆனாலும் வட்டாட்சியர் அவர்களின் உத்தரவை செயல்படுத்தி நடவடிக்கை எடுக்க மறுக்கிறார். திரு.கார்த்திகேயன் அவர்கள் ஒருதலைபட்சமாக செயல்பட்டுக்கொண்டு நேரில் சென்று தகவல் கேட்டாலும் சரியான பதிலை கூற மறுக்கிறார் ஆகவே அய்யா அவர்கள் தலையிட்டு இப்பிரச்சினைக்கு உரிய தீர்வு கண்டு ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கும்படி தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 27.07.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் சிவகாசி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு வருமாறு 14.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**4. மனுதாரர் 21.08.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

" விருதுநகர் மாவட்டம் சிவகாசி வட்டம் திருத்தங்கலில் சர்வே எண்.1456 உட்பிரிவு 10 சண்முகவேல் தேவர் சந்தில் உள்ள பொதுப்பாதையை வெ.பாலகிருஷ்ணன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். இதுகுறித்து மாநகராட்சிக்கும், வட்டாட்சியருக்கும் புகார் அளித்திருந்தேன். மேற்கண்ட வெ.பாலகிருஷ்ணன் என்பவர் ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப்பை அகற்றிட வட்டாட்சியர் தனது 24.04.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக சிவகாசி மாநகராட்சி ஆணையருக்கு கடிதம் அனுப்பியிருந்தார். பின்னர் சிவகாசி மாநகராட்சியைச் சேர்ந்த Building Inspector மேற்கண்ட பாலகிருஷ்ணன் என்பவரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இடம் மாநகராட்சிக்கு சொந்தமானதில்லை

என தெரிவித்துள்ளார். மேற்கண்ட பாலகிருஷ்ணன் பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் எனது வீட்டிற்கான பாதை அடைக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பாலகிருஷ்ணன் என்பவரால் பொதுப்பாதையை ஆக்கிரமித்து எழுப்பப்பட்டுள்ள இரும்பு கேட்டை சிவகாசி மாநகராட்சியால் அகற்றி எனது வீட்டிற்கு பாதை ஏற்படுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட எனது 19.07.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. சிவகாசி மாநகராட்சியின் நகரமைப்பு அலுவலர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் 21.08.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர்:

" மனுதாரர் தனது வீட்டிற்கான பொதுப்பாதையை திரு.வெ.பாலகிருஷ்ணன் என்பவர் ஆக்கிரமித்து கேட் அமைத்துள்ளதாக தெரிவித்த புகாரையடுத்து, மேற்கண்ட இடம் ஆய்வு செய்யப்பட்டது. இந்நேர்வில் சிவகாசி மண்டல துணை வட்டாட்சியர் அறிக்கை நாள் 21.04.2023ன்படி தாவா இடம் நத்தம் புல எண்.1456/10ல் பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் மனுதாரருக்கு பாதை இல்லாமல் உள்ளது எனவும் அதனை நேராய்வு செய்திடுமாறும் மாநகராட்சிக்கு 04.05.2023 அன்று கடிதம் வரப்பெற்றது. இந்நிலையில் திரு வெ.பாலகிருஷ்ணன் வருவாய் கோட்டாட்சியருக்கு மேல் முறையீடு சமர்ப்பித்துள்ளார். எனவே சிவகாசி மாநகராட்சியால் இந்நேர்வில் மேல்நடவடிக்கை ஏதும் தொடர இயலவில்லை என்பதையும், மேற்கண்ட நேர்வில் தடையாணை ஏதும் பிறப்பிக்கப்படவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும், சிவகாசி ஆணையரின் 11.08.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

6. சிவகாசி மாநகராட்சி ஆணையர் தனது 11.08.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" மனுதாரர் மனுவின் அடிப்படையில் திரு.அய்யாத்துரை அவர்களுடன் நகரமைப்பு ஆய்வாளர் திரு.கார்த்திகேயன் நேராய்வு செய்து மாநகராட்சிக்கு உரிய பாதை இடமாக இருந்தால் ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து வரப்பட்டது. இந்நிலையில் மேற்படி ஆக்கிரமிப்புதாரர் திரு வெ.பாலகிருஷ்ணன் வருவாய் வட்டாட்சியர், சிவகாசி அவர்களின் உத்தரவின் மீது மேல் முறையீடு மனு சமர்ப்பித்து அதன் நகல் மாநகராட்சிக்கு 08.05.2023ல் வரப்பெற்றது. எனவே, மேற்படி மேல்முறையீடு மனு குறித்து சிவகாசி வருவாய் வட்டாட்சியருக்கு கடிதம் 23.05.2023ல் மேல்முறையீடு மனு குறித்து மேற்கொண்ட நடவடிக்கைகளின் விவரம் குறித்துக் கேட்டும், அதே தேதியில் மேற்படி ஆக்கிரமிப்பாளர் திரு.வெ.பாலகிருஷ்ணன் என்பவருக்கு ஆவணங்கள் சமர்ப்பிக்க கோரியும் அறிவிப்பும் அனுப்பப்பட்டது. மேற்படி சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் (மூலபத்திரம் எண்.016317/1945 மற்றும் ஆவண எண்கள்.1560/1990, 1561/1990 மற்றும் 1562/1990). மேற்படி கிரையப்பத்திரங்களை கூராய்வு செய்ததில் உள்ள பரப்பளவும், நில அளவை ஆவணங்களின்படி உள்ள பரப்பளவும் வேறுபாடுகளுடன் அமைவதாலும், அளவுகள் மாறுபடுவதாலும் பாலகிருஷ்ணன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் 05.06.2023 அன்று சிவகாசி வருவாய் வட்டாட்சியருக்கு தெளிவுரை விளக்கம் கோரி அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆக்கிரமிப்புதாரரின் வழக்கறிஞர் திரு.பி.செந்தில்குமார், ஆத்திகுளம் அவர்களின் அறிவிப்பு 31.05.2023 தேதியிட்டது (அலுவலகத்திற்கு 02.06.2023) வரப்பெற்றதில், திரு.வெ.பாலகிருஷ்ணன் அவர்கள் குடியிருந்து வரும் திருத்தங்கல் கிராமம் நத்தம் புலஎண்.1456/6(பட்டாஎண்.3027)11.11.1992ல் பட்டா வழங்கப்பட்டது எனவும் அது முதல் அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதாகவும் வருவாய் வட்டாட்சியர் சிவகாசி அவர்களின் உத்தரவு படி மேற்படி பகுதி புல எண்கள் 1456/6, 1456/11 மற்றும் 1456/12 இடங்களை அளந்து பார்க்காமலும் புல எண்.1456/10ல் தமது கட்சிக்காரர் ஆக்கிரமிப்பு செய்து கேட் அமைத்துள்ளார் என்பது ஏற்கத்தக்கதல்ல எனவும், முழு அளவில் சர்வேயர் உதவியுடன் மறு அளவீடு செய்யும் வரை வருவாய் வட்டாட்சியரின் 24.04.2023 கடிதத்தின் பேரில் நடவடிக்கையினை நிறுத்தி வைக்கும்படி தெரிவித்திருந்தார்.

மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு மறுப்பு அறிவிப்பு சிவகாசி மாநகராட்சி கடிதம் நாள்.06.06.2023ல் வருவாய் வட்டாட்சியரின் 24.04.2023ம் தேதிய கடிதத்தின்படி சிவகாசி மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் 21.04.2023ம் தேதிய ஆய்வு அறிக்கையின்படியே வழங்கப்பட்டுள்ளது எனவும், புல எண்கள்.1456/5, 1456/6, 1456/11 மற்றும் 1456/12 ஆகிய இடங்களை அளக்காமல் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதை ஏற்க இயலாது எனவும், ஆட்சேபனை இருந்தால் ஆவணங்களுடன் வருவாய் வட்டாட்சியருக்கு மனு செய்திருக்க வேண்டும் எனவும், வருவாய் வட்டாட்சியரின் 24.04.2023ம் தேதிய அறிவிப்பு நடவடிக்கையினை நிறுத்திவைக்க முகாந்திரம் ஏதுமில்லை என தெரிவித்தும், வருவாய் வட்டாட்சியருக்கு ஆவணங்கள் சமர்ப்பிக்க மேற்படி கட்சிக்காரருக்கு (திரு.வெ.பாலகிருஷ்ணன்) அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் திரு.வெ.பாலகிருஷ்ணன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவண நகல்கள் சிவகாசி வருவாய் வட்டாட்சியருக்கு பெறப்பட்ட அன்றே (05.06.2023) தெளிவுரை விளக்கம் கோரி அனுப்பப்பட்டது.

இந்நிலையில் மனுதாரர் திரு.ரா.அய்யாத்துரை அவர்கள் தனது 14.07.2023ம் தேதிய மனுவில் வருவாய் வட்டாட்சியர், சிவகாசி அவர்களின் கடித எண்.ந.க.ஆ.1/5672/2023 நாள் 08.06.2023 (வருவாய் கோட்டாட்சியருக்கு முகவரியிடப்பட்டது) கடிதம் மூலம் தனது அறிக்கையை அளித்து விட்டார் எனவும், அதன் பின்பும் திரு.கார்த்திகேயன் அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார் எனவும் தெரிவித்திருந்தார். ஆனால் வருவாய் வட்டாட்சியரின் அறிக்கையின் மீது வருவாய் கோட்டாட்சியர் சிவகாசி அவர்களின் இறுதி உத்திரவு வரப்பெறாத நிலையிலும், நில அளவை ஆவணங்கள் மற்றும் திரு.பாலகிருஷ்ணன் சமர்ப்பித்த பத்திர ஆவணங்கள் ஆகியவற்றின் அளவுகள் வேறுபாடுகளுடன் அமைவதாலும், மேற்படி ஆக்கிரமிப்பு அளவுகள் விபரம் முழுஅளவில் அறிய இயலவில்லை என்பதாலும், மேற்படி புல தணிக்கை விபரங்களில் நிலையில் உள்ள ஆக்கிரமிப்பு அளவுகள் குறித்து வருவாய்துறையால் தெளிவுபடுத்தப்படாத நிலையில் உள்ளதாலும், மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும், மேற்படி நிகழ்வில் எவ்வித உள்நோக்கமும் இல்லை என்பதை மிகவும் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

மனுதாரரின் 14.07.2023ம் தேதிய மனு மீது மேற்காணும் விபரத்தினை இவ்வலுவலக ந.க.எண்.1977/2022/எப்1 நாள் 24.07.2023ம் தேதிய கடிதத்தில் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஆக்கிரமிப்பு பரப்பளவுகள் வேறுபாடுகளுடன் அமைவதாலும், ஆக்கிரமிப்பு பரப்பளவின் மீது இறுதி முடிவு எடுக்க இயலாத நிலையில் உள்ளதாலும், சிவகாசி வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் மேல்முறையீடு மனு மீது இறுதி உத்தரவு வரப்பெற்றதும், அதன்பேரில்

உரிய காலக்கெடுவிற்குள் ஆக்கிரமிப்பினை அகற்றி அறிக்கை சமர்ப்பிக்கிறேன் என்பதை மிகவும் பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம், சிவகாசி மாநகராட்சி நகரமைப்பு அலுவலர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம், ஆணையரின் அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் சிவகாசி வட்டம், திருத்தங்கலில் சர்வே எண்.1456 உட்பிரிவு 10 சண்முகவேல் தேவர் சந்தில் உள்ள பொதுப்பாதையை திரு வெ.பாலகிருஷ்ணன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றும் அதனை அகற்றி தனது வீட்டிற்கு பாதை ஏற்படுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

தாவா இடம் நத்தம் புல எண்.1456/10 பரப்பளவு 0.0008.0 ச.மீ. நிலத்தினை நத்தம் புல எண்.1456/6ன் ஆஜர்பட்டாதாரர் திரு.வெ.பாலகிருஷ்ணன் என்பவர் வீட்டின் கேட் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார் எனவும் நத்தம் புல எண்.1456/10ல் பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பதால், நத்தம் புல எண்.1456/12 பட்டாதாருக்கு பாதை இல்லாமல் உள்ளது எனவும், நில அளவை ஆவணங்களுடன் கூடிய அறிக்கை சிவகாசி மாநகராட்சிக்கு 04.05.2023 தேதியில் வரப்பெற்றுள்ளது எனவும் அதன்பேரில் மேற்படி மனுதாரர் திரு.ரா.அய்யாத்துரை த/பெ. ராஜா அவர்களுடன் நகரமைப்பு ஆய்வாளர் திரு.கார்த்திகேயன் நேராய்வு செய்து மாநகராட்சிக்கு உரிய பாதை இடமாக இருந்தால் ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து வரப்பட்டது என்றும் ஆக்கிரமிப்புதாரர் திரு. வெ.பாலகிருஷ்ணன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள்(மூலப்பத்திரம்எண்.016317/1945 மற்றும் ஆவணஎண்கள்.1560/1990,1561/1990, மற்றும்1562/1990) மேற்படி கிரையப்பத்திரங்களை கூராய்வு செய்ததில் உள்ள பரப்பளவும், நில அளவை ஆவணங்களின்படி உள்ள பரப்பளவும் வேறுபாடுகளுடன் அமைவதாலும், அளவுகள் மாறுபடுவதாலும் பாலகிருஷ்ணன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் 05.06.2023 அன்று சிவகாசி வருவாய் கோட்டாட்சியருக்கு தெளிவுரை விளக்கம் கோரி அனுப்பப்பட்டுள்ளது எனவும் ஆணையாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சிவகாசி வருவாய் வட்டாட்சியர் 24.04.2023 நாளிட்டு சிவகாசி மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பிய கடிதத்தில் நத்தம் புல எண்.1456/10 பரப்பளவு 0.0008.0 ச.மீ. நிலத்தினை நத்தம் புல எண்.1456/6ன் ஆஜர்பட்டாதாரர் திரு வெ.பாலகிருஷ்ணன் என்பவர் வீட்டின் கேட் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார். நத்தம் புல எண். 1456/10 பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பதால் நத்தம் புல எண்.1456/12 பட்டாதாருக்கு பாதை இல்லாமல் உள்ளது. எனவே சிவகாசி வட்டம், திருத்தங்கல் கிராமம், கிராம நத்தம் புல எண்1456/10 பரப்பளவு 0.0008.0 ச.மீ. நிலத்தில் நத்தம் புல எண். 1456/6ன் ஆஜர்பட்டாதாரர் திரு.வெ.பாலகிருஷ்ணன் என்பவர் வீட்டின் கேட் அமைத்து ஆக்கிரமிப்பு செய்திருப்பது ஊர்ஜிதமாகிறது. எனவே பாதையில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவித்து கிராம கணக்கு ஆவணங்கள் ஆக்கிரமிப்பினை குறியீடு செய்த நகல் மற்றும் படிவம்-1 ஆகியவையும் அனுப்பியுள்ளார். இதன் மீது மாநகராட்சி நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்துவது சரியான அணுகுமுறை இல்லை என இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்டுகிறது. வருவாய் வட்டாட்சியரின் அறிக்கையின் மீது வருவாய் கோட்டாட்சியர் சிவகாசி அவர்களின் இறுதி உத்திரவு வரப்பெறாத நிலையிலும் நில அளவை ஆவணங்கள் மற்றும் பாலகிருஷ்ணன் சமர்ப்பித்த பத்திர ஆவணங்கள் ஆகியவற்றின் அளவுகள் வேறுபாடுகளுடன் அமைவதாலும் மேற்படி ஆக்கிரமிப்பு அளவுகள் விபரம் முழு அளவில் அறிய இயலவில்லை என்பதாலும் மேற்படி புல தணிக்கை விபரங்களில் உள்ள ஆக்கிரமிப்பு அளவுகள் குறித்து வருவாய்த்துறையால் தெளிவுபடுத்தப்படாத நிலையில் உள்ளதாலும் மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றும்

நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்ற சிவகாசி மாநகராட்சி ஆணையரின் அறிக்கையை ஏற்க இயலாது. இது காலம் கடத்தும் செயலாகவே இம்முறைமன்றம் கருதுகிறது. மனுதாரர் கடந்த 3 வருடங்களாக தனது குடும்பம் வசிக்க இடமில்லாமல் சொந்த வீட்டை விட்டு வாடகை வீட்டில் வசித்து வருவதை சிவகாசி மாநகராட்சி ஆணையர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. மேலும் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை கண்டுங்காணாமல் இருப்பதும் தெள்ளத்தெளிவாக விளங்குகிறது.

Sub section (6) of section 118 of the Tamil Nadu Urban Local Bodies Act,1998 provides as follows:

Section 118 Vesting of public-streets and their appurtenance with Municipality:-

> (6) When any building or other structure or any fixture in any form attached to a building causes a projection, encroachment or obstruction over any public street or other public places vested in the municipality, the Commissioner may, in accordance with such bye-laws made by the council for this purpose, by a written notice, require the owner or the occupier of the building to remove such encroachment or obstruction–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி உரிய நடவடிக்கை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இந்நேர்வில் மாநகராட்சி தனது பொறுப்பினை உணர்ந்து செயல்படவில்லை.

எனவே 2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் அடிப்படையிலும் குறிப்பாக:-

பிரிவு '7' The Ombudsman shall perform all or any of the functions, namely"-

7 ( c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், மற்றும்

பிரிவு 12 (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely:-

(c ) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body அடிப்படையிலும் இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் மனு மீது உரிய விதிமுறைகளின்படி தக்க நடவடிக்கை எடுக்காமல் இன்னும் காலம் தாழ்த்திடும் சம்மந்தப்பட்ட மாநகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Director of Municipal Administration is directed to frame charges against the Commissioner, Sivakasi Corporation and other field level functionaries concerned for their sheer slackness, indifference and lack of devotion to duties by not evicting the encroachment involved in the complaint issue. The Commissioner's conduct is appalling and shocking in the light of

the letters of the local Revenue Thasildar addressed to the Commissioner dated 22/04/2023 and the R.D.O. dated 08.06.2023. The Commissioner's letter dated 05.06.2023 to the Sivakasi Thasildar is wanton, unwarranted besides diversionary, deviant, and meant to aid the encroacher by going beyond his limits without discharging his obligations in an objective and neutral manner. Instead of evicting the encroachment on the "pathai" promboke that is within the jurisdiction of the Commissioner he has attempted to fool the system and petitioner by recirculating the matter as a 3rd. person on the road without realising his responsibilities. Such disobedience, inaction, pretentious behavior and default in discharging his duties are condemned by this Forum.

2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. ரா. அய்யாத்துரை, 3, சண்முகவேல் தேவர் சந்து,
   S.N.புரம் ரோடு, திருத்தங்கல் – 626 130, விருதுநகர் மவாட்டம்.

2. ஆணையர், சிவகாசி மாநகராட்சி, சிவகாசி.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை– 600 028.

4. இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

செயலாளர்